# குழந்தை உலகம்

## சிறுவர் பாடல்கள்

ஆலையூரன் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குழந்தை உலகம்

சிறுவர் பாடல்கள்

ஆலையூரன் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



உங்கள் பாடல்களை
உங்களுக்கே சமர்ப்பிக்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | குழந்தை உலகம் |
| ஆசிரியர் | : | ஆலையூரன் க. தங்கராசா |
| வகை | : | சிறுவர் பாடல்கள் |
| உரிமை | : | திருமதி. வ. தங்கராசா |
| அட்டைப் படம் | : | அ. அருள்பாஸ்கரன் |
| முதற்பதிப்பு | : | 02-11-2010 |
| வெளியீடு | : | அருள் வெளியீட்டகம்<br>37 / 7, மத்திய வீதி, உவர்மலை-<br>திருகோணமலை.<br>தொலைபேசி இல: 026-2221507. |
| கிடைக்குமிடம் | : | லங்கா புத்தகசாலை.<br>F. L.14.1. டயஸ் பிளேஸ்.<br>குணசிங்கபுரம்.<br>கொழும்பு-12.<br>தொ.பே. இல: 011- 2341942 |
| ISBN | : | 978-955-52086-3-5 |
| விலை | : | ரூபாய் 150/= |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஆலையூரன் அமரர் க.தங்கராசா அவர்களின் 'குழந்தை உலகம்' என்னும் இச்சிறுவர் பாடல்கள் அடங்கிய நூல் 34 பாடல்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலிலும் ஒரு படிப்பினையை வைத்துப் பின்னியுள்ளதை அவதானிக்க முடியும். இலகு மொழிநடையில் சிறுவர் விரும்பத்தக்க கருப்பொருட்களில் ஓசைநயத்துடன் பாடல்களை யாத்துத் தந்துள்ளார். நல்லாசிரியராய், அதிபராய், சிறந்த கல்விப்பணிப்பாளராய் பணிபுரிந்தவர். இவற்றின் ஊடாகப் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் முத்திரைகளாக இப்பாடல்கள் விளங்குகின்றன.

திரு.க.தங்கராசா அவர்கள் ஒரு தமிழ்ப் பற்றாளர். ஈடிணையற்ற சிறந்த கல்விமான். பயிற்றப்பட்ட பட்டதாரி. பட்டதாரிகளுக்கும் டிப்ளோமா பாடங்களை நடத்துபவர். அவரது கற்பித்தல் முறைகள் பிரமிக்கத் தக்கவை. நல்லதொரு கவிஞன். சிறுவர்களுக்கான ஆக்கங்களை எழுதியவர். இவரது சிறுவர் நவீனமான 'சங்கீதன்' நூலக ஆவணவாக்கல் அபிவிருத்திச் சேவை சபையினால் சிறந்த ஆக்கமாகத் தெரிவு செய்யப்பட்டு பிரசுரத்துக்கான 40 ஆயிரம் ரூபாயைப் பெற்றுக்கொண்டு வெளிவந்தது. 'பொங்கினாள் மீனாட்சி' அவரது கவிதை வீச்சுக்களுக்கு எடுத்துக்காட்டக விளங்குகிறது. 'குழந்தை உலகம்' அவரது மூன்றாவது படைப்பாகும். தேடுவாரற்றுக் கிடக்கும் ஆலையூரானின் ஆக்கங்களைத் தேடியெடுத்து வெளிக்கொண்டு வரும் முயற்சி போற்றுதற்குரியது. இதனை வெளியிடும் கலாநிதி ச.அருளானந்தம் பாராட்டப்பட வேண்டியவர்.

தேசிய ஒற்றுமை, சேர்ந்து வாழ்தல், கற்றலின் பயன், வாழ்நாள் முழுவதும் கல்வி, அன்பு, கோபம் கொள்ளாதே போன்ற நற்பண்புகளை சிறுவருக்குப் புகட்டுவதாக அவரது பாடல்கள் அமைந்துள்ளன. சில எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். முதற்பாடலில் குழந்தையை அழகாகக் காட்டுகிறார். 'அன்பின் சின்னம் குழந்தைகள், அவர்கள் உலகம் அற்புதம்', குயிலுக்கு 'உனக்கேன் கூடில்லை, பாலர் தருவோம் வருவாயா' எனக் குயிலை அழைக்கிறார். 'அன்னை' என்ற பாடலில் ஒவ்வொரு வரியும் நம்மைச் சிந்திக்க வைப்பதைக் காணலாம். 'கன்னந் தொட்டு முத்தம் தந்து கவலை தீர்க்கும் அன்னை', 'கண்ணீர் விட்டால் கவலையோடு கட்டிக் கொஞ்சும் அன்னை', 'என்னை ஊட்டத் தன்னைவாட்டி என்றும் வாழும் அன்னை' போன்ற வரிகள் நெஞ்சைக் கொள்ளை கொள்கின்றன. படிப்போரை ஈர்க்கவல்லன.

ஒவ்வொரு தலைப்புகளிலும் நான்கு வரிகள் கொண்ட ஐந்து பாடல்களைக் 'குழந்தை உலகத்தில்' தந்துள்ளார். மற்றவரைக் கற்கத் தூண்டுவதிலும், மற்றவர் உயர்வில் இன்பம் காண்பதிலும், கல்வி வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படுவோரைத் தட்டிக் கொடுத்து, அவர்தம் பணியூடாகச் சமூகம் வளர்ச்சி பெறவேண்டும் - ஒவ்வொரு பிள்ளையின் எதிர்காலமும் வளமுடையதாய் அமையவேண்டும் என்று உளமார உழைத்த பெருமனிதனை நாம் இழந்துவிட்டோம். அவரது படைப்புகள் ஊடாக அவரது எண்ணங்களுக்கு உயிர்கொடுக்கப் பாடுபடுவோம். அவரது நூல்களை வாங்கிக் கற்றுப் பயனடைய உங்களை அழைக்கிறேன்.

ஆ.செல்வநாயகம் B.A,M.ED, PGDE,PGDEM SP.TRD.Agri
அதிபர்
தி /உவர்மலை விவேகானந்தா கல்லூரி
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

அமரர் ஆலையூரன் க. தங்கராசாவின் எழுத்துக்களை வாசகர்களுக்கு அறிமுகம் செய்யவேண்டிய கடப்பாடு எனக்கு உள்ளது. நான் அதனை ஒரு பேறாகவே கருதுகிறேன். இந்த மனிதப்பிறவி கிடைத்தற்கரியது. பிறந்தவர்கள் எல்லோரும் போய்த்தான் ஆகவேண்டும். இன்னொரு பிறவி வரும். மீண்டும் சந்திக்கலாம் என்பது பகற்கனவே. என்னைப் பொறுத்தளவில் இனி அது கிடையாது.

ஆலையூரன் கந்தையா தங்கராசா ஒரு அபூர்வ பிறவி. சிறுவர்களாக இருந்தபோது நாங்கள் எதிரும் புதிருமாகவே இருந்தோம். அறியாத இளம்வயதில் சண்டைகள்தான் அதிகம். விளையாட்டில் சண்டை. வீண் பிடிவாதத்தினால் சண்டை. இப்படிச் சண்டையிடுவதால் இருவரும் கதைக்காது இருந்த நாட்கள் அதிகம். எங்கள் ஊர் முன்னேற வேண்டும் என்றால் எங்களில் சிலர் வெளியூர்களுக்குச் சென்று கற்கவேண்டிய அவசியத்தை அப்போது ஆலங்கேணிப் பாடசாலையில் கற்பித்த தலைமை ஆசிரியர் அமரர் சி. சின்னத்தம்பி பல பெற்றாரிடம் வற்புறுத்தி வந்தார். அதன் பயனால் நான் மட்டக்களப்புக்குக் கல்வி கற்கச் சென்றேன்.

ஆலங்கேணியின் வளர்ச்சியில் ஆர்வமாக இருந்த ஒருவர்தான் அமரர் வீ.நாகேந்திரம். அவர் பல பெற்றோர்களைச் சந்தித்து விளக்கினார். நான் வெளியூருக்குச் சென்றபின்னர்தான் எங்கள் ஊரின் நிலை புரிந்தது. திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு திரு. சி. சின்னத்தம்பி அதிபர் அவர்கள் வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் அனுமதியினைப் பெற்றுக் கொடுத்தார். நான் திரு.தங்கராசா, திரு.கு.கோணாமலை போன்றோர்களுக்கு வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் அனுமதியினைப் பெற்றுக் கொடுத்தேன். திரு.வ.மனோகரனுக்குச் சிவானந்த வித்தியாலயத்தில் அனுமதியெடுத்துக் கொடுத்தேன். அதற்கு அமரர் நாகேந்திரம் உதவிபுரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சிவானந்த வித்தியாலயத்தில் •ஆங்கிலக் கல்வியைத் தொடர்ந்தேன். மற்றவர்கள் தமிழ் மொழிக்கல்வியைத் தொடர்ந்தார்கள். எங்களுக்கு வெளியூர்க் கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்தியது. பரீட்சை முடிந்து ஊருக்கு வந்ததும் ஊரின் மறுமலர்ச்சியில் ஈடுபட்டோம். பல இன்னல்களை அனுபவித்தோம். ஆசிரியர்களாக வந்த பின்னர்தான் ஆலங்கேணி விழிப்புற்றது. எனது தலைமையில் இளைஞர்கள் செயற்பட்டார்கள். கல்வியுடன் கலையார்வமும் கிராமத்தில் விழிப்புற்றது.

சிவானந்த வித்தியாலயம் எனக்கும், வந்தாறுமூலை மத்திய கல்லூரி திரு. க. தங்கராசா, திரு.கு. கோணாமலை ஆகியோருக்கும் மனதில் நல்ல சிந்தனைகளை வளர்த்து விட்டிருந்தன. இன்று ஆலங்கேணியும் அதன் அயல்கிராமங்களும் கல்வியில் இந்த அளவுக்காவது முன்னேறி இருப்பதற்கு அதிபர் சி.சின்னத்தம்பி அவர்களினதும் திரு. வீ..நாகேந்திரம் அவர்களினதும் வழிகாட்டல்தான் காரணமாகும்.

சுவாமி விபுலானந்தர் கூறியது போல் எங்களை எங்கள் பெற்றோர் எஸ்.எஸ்.சி. வரைதான் கற்பித்தார்கள். நாங்கள் இருவரும்தான் நாங்களே எங்கள் சுயமுயற்சியினால் உயர்கல்வியினை பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டு கற்றோம். முயற்சியின் பயனாக உயர்பதவிகள் எங்களை நாடி வந்தன.

திரு க.தங்கராசா தமிழ்ப் பற்றுள்ளவர். கவிதை, சிறுகதை, நாடகம், சிறுவர் பாடல்கள், கட்டுரைகள் என எழுத வல்லவர். அவரது ஆக்கங்களைப் பல பத்திரிகைகள் பிரசுரித்தன. அவரது அந்த ஆர்வம்தான் என்னையும் எழுதத்தூண்டியது. அவர் உயிரோடு இருக்கும் வரை ஒரு நூலையாவது வெளிக்கொண்டுவரவேண்டும் என்று உழைத்தார். அது முடியவில்லை. ஒரு பின்தங்கிய கிராமத்தில் பிறந்து, படித்து தனது முயற்சியினால் படிப்படியாக உயர்ந்து இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்து கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்று அமரரானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் க.தங்கராசா பெயருக்கேற்ற தங்கமான ராசாதான். நல்லாசிரியராகத் தனது சேவையினைச் செய்தார். நல்லதொரு அதிபராகவும், கல்விப்பணிப்பாளராகவும் கடமையாற்றியவர். இலகுவாகக் கற்பிக்கும் திறமுடையவர். இனிமையாகப் பழகவல்லவர். எவர் மனதையும் புண்படுத்தாதவர். சிறந்த பேச்சாளரான திரு.க.தங்கராசா ஒரு இலக்கியவாதியுமாவார். நிறையவே எழுதினார். அவரது ஆக்கங்கள் எழுத்துருவில் கிடக்கின்றன.

இது வரை அவரது 'சங்கீதன்', 'பொங்கினாள் மீனாச்சி' ஆகிய இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளேன். இது 'குழந்தை உலகம்' மூன்றாவது நூலாகும். இந்நூலில் சிறுவர்கள் பாடல்கள் உள்ளன. சுமார் முப்பத்து நான்கு சிறுவர் பாடல்கள் இந்நூலில் உள்ளன. அவற்றைத் திரு.தங்கராசா அவர்களது குடும்பத்தினர் தந்துதவியுள்ளனர். சிறுவர்களுக்கான அழகிய பொருள்புதைந்த பாடல்களை இலகு தமிழில் தந்துள்ளார். அவரிடம் படித்தவர்கள் நிறையவே உள்ளனர். ஆளுக்கொரு புத்தகத்தை வாங்கி தங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்துப் படிக்கச் செய்யலாம்.

சிங்கள மொழியில் ஏராளமான சிறுவர் நூல்கள் வெளிவருகின்றன. அவற்றைச் சிங்கள மக்கள் வாங்கிப் படிக்கிறார்கள். தமிழ் மொழியில் அருமையான நூல்கள் வெளிவருகின்றன. ஆனால் வாங்கிப் படிப்பவர்கள் மிகமிகக் குறைவு. இந்த நிலை மாறவேண்டும். அதற்கு வாசகர்களாகிய உங்களது ஒத்துழைப்பு அவசியம். இன்னும் திரு.க.தங்கராசா அவர்களது நூல்கள் உள்ளன. அவற்றையும் வெளியிடவுள்ளேன். அவரது அபிமானிகள் அவரது ஆக்கங்களுக்கு ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை தந்துதவிய உவர்மலை விவேகானந்தா கல்லூரி அதிபர் திரு. ஆ. செல்வநாயகம் அவர்களுக்கும், பதிப்புரை நல்கிய லங்கா புத்தகசாலை முகாமையாளர் திரு. க.சதீஸ் அவர்களுக்கும், அழகாக அச்சிட்ட நிசான் பிரின்டர்ஸ் அலுவலர்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்
கேணிப்பித்தன் ச.அருளானந்தம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே .....


- குழந்தை உலகம்
- தோழர் நாங்கள்
- குயிலக்கா
- வண்ண நிலவு
- எங்கள் வீட்டுப் பசு
- காலமெல்லாம் கற்கலாம்
- கோழிக்குஞ்சு
- உழவர் நாங்கள்
- ஆசிரியர்
- வீட்டுத் தோட்டம்
- வாழ்ந்திடு
- புகை வண்டி
- நம் கைவண்ணம்
- நம் அன்னை
- மாம்பழம்
- கடற்கரை
- எங்கள் நாடு
- பூனைக் குட்டி
- சிட்டுக் குருவி
- மாமா வருவார்
- வாழை
- காகம்
- பட்டம்
- மழை வருது
- தொலைக் காட்சி
- ரோசாப்பூ
- வீட்டுச் சேவல்
- பாலர் ஆடும் பந்து
- கப்பல்
- வெண்புறா
- கட்டெறும்பு
- அழகான குளம்
- வீடு கட்டுவோம்
- நாய்க் குட்டி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை உலகம்



குழந்தை ஒன்று வருகுது
கோடி இன்பம் துள்ளுது
சுழன்று கண்கள் அலையுது
சொர்க்கம் வந்து அள்ளுது.




பூக்கள் போன்ற கன்னமாம்
பூவின் அழகுக் கண்களாம்
தூக்கத் திலும் சிரித்திடும்
துயரம் அறியாக் குழந்தையாம்

அம்மா அப்பா இருப்பதை
அழகுக் கண்கள் தேடுது
அம்மா அம்மா என்றுதான்
அசைந்து தெய்வம் செல்லுது



பொம்மை கையில் ஆடுது
பாவை நடனம் காட்டுது
அம்மா தன்னைக் கைகளால்
அணைத்து நின்று ஆடுது




சின்னச் சின்னக் கைகளால்
தாளம் கொட்டிக் காட்டுது
அன்பின் சின்னம் குழந்தைகள்
அவர்கள் உலகம் அற்புதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் நாங்கள்



தோழர் நாங்கள் கூடுவோம்
தொல்லை அற்று வாழுவோம்
நாளை மலரும் நாட்டிலே
நல்ல பணிகள் ஆற்றுவோம்.




ஒற்றுமை யாய் வாழுவோம்
உண்மை பேசி மகிழுவோம்
கற்று நன்கு ஒழுகுவோம்
கடமை போற்றி வாழுவோம்

ஒன்றாய் எங்கள் நாட்டிலே
ஓடிப் பணிகள் செய்குவோம்
நன்றாய் மனது வைத்துநாம்
நாட்டைக் கட்டி எழுப்புவோம்



பெற்ற தாயும் நமதரும்
பிறந்த நாடும் ஒன்றென
வெற்றி முழக்கம் செய்துமே
வெல்லும் பாதை செல்லுவோம்.

சாதிச் சண்டை நீக்குவோம்
சந்தி எங்கும் முழங்குவோம்
காதில் இன்பம் பொங்கிடும்
கருத்துக் கேட்டு வாழுவோம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலக்கா




குயிலே குயிலே குயிலக்கா
கூவிக் கொஞ்சம் காட்டக்கா
அயலில் வந்து பாடக்கா
அன்பாய் என்னைப் பாரக்கா

உந்தன் பாட்டு இனிப்பூட்டும்
உள்ளம் எல்லாம் களிப்பூட்டும்
செந்தேன் போலே சுவையூட்டும்
சேர்த்து என்னைத் தாலாட்டும்



தேனில் குழைத்த குரலெடுத்து
சொக்க வைக்கும் இசைசேர்த்து
வானில் பரவச் செய்திடுவாய்
வடிவாய் எங்கும் பரப்பிடுவாய்.

கன்னங் கரிய நிறங்கொண்டு
கல்லும் உருகப் பாடுகின்றாய்
என்னை ஆடச் செய்கின்றாய்
என்றும் மகிழச் செய்கின்றாய்




கூ ..ஊ.. கூ..ஊ என்றேதான்
கூவும் அழகைக் கேட்கின்றோம்
பாவம் உனக்கேன் கூடில்லை
பாலர் தருவோம் வருவாயா?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ண்ண நிலவு




வண்ண நிலவே வண்ண நிலவே
விண்ணில் நீந்தும் வண்ண நிலவே
எண்ணம் நிறைந்த வண்ண நிலவே
என்னை அழைக்கும் சின்ன நிலவே

உன்னைத் தொட்டுக் கொள்ளவா
உன்னை அள்ளிக் கொள்ள வா
என்னை மடிமேல் வைத்துக் கொள்
என்னைச் சிரித்து மகிழச்செய்





துண்டுப் பிறையாய் தோன்றுவாய்
திரும்ப வளர்ந்து கொள்கிறாய்
கண்டு கொள்ள முடியாமல்
கடிதில் ஒரு நாள் மறைகிறாய்

திரும்ப கூனல் பிறையதாய்
தோன்றி தெம்பு ஊட்டுறாய்
விரும்பி மகிழ வைக்கிறாய்
மீண்டும் மீண்டும் வருகிறாய்




வெள்ளிக் கூட்டம் நடுவிலே
விளங்கும் நல்ல சோதிநீ
பள்ளிப் பாலர் அழைக்கிறோம்
பக்கம் வாராய் ஆடுவோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வீட்டுப் பசு




இனிய பாலைத் தருகின்ற
எங்கள் வீட்டுப் பசுவிது
கனியக் கனியக் கன்றுடன்
கவலை யற்று வாழுதாம்.

அம்மா என்று கூவியே
அன்புக் கன்றை அழைத்திடும்
அம்மா நோக்கிக் கன்றுந்தான்
அருகில் துள்ளி ஓடிடும்





எங்கள் வீட்டு பசுவதும்
இனிய கன்றுக் குட்டியும்
எங்கள் வீட்டில் இனிமையாய்
இருந்து வாழும் செல்வமாம்.




வேண்டும் உணவு கொடுக்கிறோம்
விதந்து போற்றி மகிழ்கிறோம்
ஆண்டு தோறும் எமக்குப்பால்
அள்ளித் தரும் வளர்கிறோம்.

நன்றி யுள்ள பசுவிது
நல்ல பாலைத் தந்திடும்
என்றும் நாங்கள் வாழவே
எங்கள் பசு உதவிடும்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாலமெல்லாம் கற்கலாம்



பாலர் நாங்கள் சேருவோம்
பள்ளிக் கூடம் செல்லுவோம்
நூலைக் கையில் கொள்ளுவோம்
நல்ல கல்வி பயிலுவோம்

ஆசி ரியர் தெய்வமாம்
அம்மா அப்பா தெய்வமாம்
நேச முடன் பள்ளியில்
நிறையக் கற்றுக் கொள்ளலாம்



நல்ல நல்ல கலைகளை
நாடி நன்கு கற்கலாம்
தொல்லை யற்றுப் படிக்கலாம்
தொழில்கள் கூடக் கற்கலாம்.

எண்ணெ ழுத்தும் கற்கலாம்
இசையும் சேர்த்துக் கற்கலாம்
கண்ணை யொத்த கல்வியை
காலம் எல்லாம் கற்கலாம்



பாடி யோடிக் கற்கலாம்
பட்டம் கட்டிக் கற்கலாம்
கூடி ஒன்றாய் கற்கலாம்
கோடி அறிவை கற்கலாம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிக்குஞ்சு



கோழிக் குஞ்சே கோழிக் குஞ்சே
கோழிக் குஞ்சாரே
தோளில் உன்னைத் தூக்கவாராய்
கோழிக் குஞ்சாரே



சின்னச் சின்ன கால்கள் உள்ள
கோழிக் குஞ்சாரே
தின்ன உனக்குத் தீனிதாரன்
கோழிக் குஞ்சாரே



வட்ட வட்ட கண்கள் உள்ள
கோழிக் குஞ்சாரே
கிட்ட வாவன் தொட்டுக் கொள்ள
கோழிக் குஞ்சாரே

பட்டுப் போல செட்டை யுள்ள
கோழிக் குஞ்சாரே
சிட்டுப் போல பறந்துவா வென்
கோழிக் குஞ்சாரே



துள்ளித் துள்ளிச் செல்லும் எந்தன்
கோழிக் குஞ்சாரே
பிள்ளை உன்மேல் ஆசைகொண்டேன்
கோழிக் குஞ்சாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவர் நாங்கள்



உழவர் எங்கள் நாட்டை
உயர்வு செய்யும் கூட்டம்
பழுதிலா தொழில் களாய்
பாடிச் செய்யும் கூட்டம்



உழவர் இல்லை என்றால்
உணவு கொள்ள மாட்டோம்
அழகாய் வாழ மாட்டோம்
அமைதி கொள்ள மாட்டோம்



வெய்யில் மழையில் தோய்ந்தே
வெட்டி நிலத்தைக் கிண்டி
செய்யும் உழவர் தொழிலை
சேர்ந்து காப்போம் வாரீர்.



பொய்யா துழைத்து நாளும்
பொழுதைப் போக்கும் உழவர்
மெய்யாய் இந்த நாட்டை
மேலாய் ஓங்கச் செய்வார்

வரம்பு வாய்க்கால் ஆக்கி
வயலில் வாழும் உழவர்
கரங்கள் உயரச் செய்வோம்
கடவுள் போலக் கொள்வோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்




ஆசிரியர் நமக் கெல்லாம்
அறிவை யூட்டும் தெய்வமாம்
மாசிலாத தொழில தால்
மனதில் தெளிவைக் காட்டுவார்

எம்மை உயர்த்தும் ஏணியாய்
என்றும் அவர் இருக்கிறார்
செம்மை காட்டும் வழியினை
செய்து போற்றும் சீரியர்



வாழும் வகை கூறுவார்
வடிவாய்க் கதைகள் கூறுவார்
நாளும் பொழுதும் நமக்கென
நன்மை செய்யும் செம்மலாம்

பள்ளிக் கூடம் சென்றுநாம்
பணிவாய் இவரின் போதனை
பிள்ளை நாங்கள் கேட்டுமே
பெரிய நன்மை கொள்ளுவோம்.



அம்மா அப்பா போலெங்கள்
ஆசிரியர் பெருந் தெய்வம்
எம்மை நாளும் உயர்த்திடும்
எங்கள் ஆசான் போற்றுவோம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் தோட்டம்



வீணாய்க் காலம் கழியாமல்
வீட்டுத் தோட்டம் செய்யுவோம்.
பேணும் பயிர்கள் நமக்கெலாம்
பெரிய நன்மை தந்திடும்.




மண்ணைக் கொத்தி நாட்டிடும்
மனதுக் கினிய பயிர்களால்
உண்ண உணவு கிடைத்திடும்
உயர்வும் வாழ்வில் கிடைத்திடும்

வீட்டுத் தோட்டம் எங்கள்
வீட்டின் தேவை போக்கும்
ஊட்டச் சத்துக் கீரை
உண்ண உடலும் வளரும்



வீட்டுத் தோட்டம் செய்தால்
வீட்டின் அழகும் கூடும்
நாட்டின் நன்மை பெருகும்
நாளும் இன்பம் பொலியும்.



நீரை நிதமும் ஊற்றி
நிறையப் பயிர்கள் செய்வோம்
கூரை முட்டும் செல்வம்
கூடி ஒன்றாய் வாழ்வோம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்திடு



ஒன்று இரண்டு மூன்று - நீ
ஒன்றாய் வாழ்ந்து காட்டு
என்றும் நன்மை செய்து - உன்
எண்ணம் நிறைந்து வாழு



நான்கு ஐந்து ஆறு - என்று
நாளும் பள்ளி செல்லு
தேனாம் தமிழைக் கற்று - உன்
தெளிந்த அறிவை பெருக்கு

ஏழு எட்டு ஒன்பது - நாளும்
ஏடு துணையென்று ஓதிடு
கோளும் பொய்யும் விட்டிடு - பொல்லாக்
கோபம் தவிர்த்து வாழ்ந்திடு



பத்து என்றே பாடிடு - பகை
பக்கம் வராது பார்த்திடு
வித்தை பலவும் கற்றிடு - வாழ்வில்
வெற்றி சூழும் வாழ்ந்திரு

உயிர்மேல் அன்பைப் பொழிந்திடு - உயர்
உண்மை பேசி உயர்ந்திடு
பயிர்கள் எங்கும் செய்திடு - அதன்
பயனால் பஞ்சம் போக்கிடு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பு க வண்டி



சுக்குச் சுக்குப் புகைவண்டி
சுறுக்காய் ஓடும் புகைவண்டி
தக்க நல்ல புகைவண்டி
தளரா தோடும் புகைவண்டி

தண்ட வாளம் மீதிலே
தாவும் எங்கள் புகைவண்டி
கண்ட இடத்தில் நிற்காமல்
கடிதாய் ஓடும் புகைவண்டி



பெட்டி பலதைக் கொழுவியே
பெரிதாய் ஓடும் புகைவண்டி
வெட்டை வெளிகள் ஊடாக
விரைந்து செல்லும் புகைவண்டி


கூவிக் கூவிச் செல்லுமாம்
கொழும்பை நோக்கிச் செல்லுமாம்
போவோர் வருவோர் எல்லார்க்கும்
பயணம் சுகமாய் அமையுமாம்



மதங்கள் பேதம் இன்றியே
மக்கள் போகும் புகைவண்டி
இதமாய்ச் செல்ல உதவிடும்
எங்கள் நாட்டுப் புகைவண்டி









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் கைவண்ணம்



சின்னச் சின்னத் தாள்களில்
சின்னச் சிட்டுச் செய்யலாம்.
அன்னப் பறவை செய்யலாம்
அவற்றில் அழகு பார்க்கலாம்



களிமண் உருட்டி உருவங்கள்
கதைத்துக் கதைத்துச் செய்யலாம்.
கிளிகள் மயில்கள் செய்யலாம்
கீதம் பாடிச் செய்யலாம்.

பனையின் ஓலை தன்னிலே
பாய்கள் பெட்டி செய்யலாம்
மனையில் இருந்தே செய்ததில்
மனதில் இன்பம் கொள்ளலாம்.



கழிவுப் பொருட்கள் எதையுமே
கழித்து வீசக் கூடாது
கழிவுப் பொருளில் பற்பல
கற்றற் பொருட்கள் செய்யலாம்.

வீடு தோட்டம் கடைகளில்
வீசும் பொருட்கள் தேடியே
கூடிப் பொருட்கள் செய்துநாம்
கோடி இன்பங் கொள்ளுவோம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம் அன்னை



கன்னம் தொட்டு முத்தம்தந்து
கவலை தீர்க்கும் அன்னை
அன்னம் தந்து ஆசையூட்டி
அணைத்துக் கொள்ளும் அன்னை

கண்ணீர் விட்டால் கவலையோடு
கட்டிக் கொஞ்சும் அன்னை
என்னை நாளும் காவிக்கொண்டு
இனிமை பூக்கும் அன்னை



சின்னச் சின்னக் கதைகள் சொல்லி
சிரிக்க வைக்கும் அன்னை
வண்ண வண்ணப் பூக்கள்சூட்டி
வடிவு பார்க்கும் அன்னை



சின்னக் கூந்தல் பின்னிப்பார்த்து
சிரித்துக் கொள்ளும் அன்னை
என்னைப் பள்ளி செல்ல வைத்து
இன்பங் கொள்ளும் அன்னை

என்னை ஊட்டத் தன்னைவாட்டி
என்றும் வாழும் அன்னை
என்னில் அன்பு வைத்துநாளும்
இன்பங் கொள்ளும் அன்னை










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாம்பழம்

மாம்பழ மாம் மாம்பழம்
மனதை அள்ளும் மாம்பழம்
நாம் விரும்பும் மாம்பழம்
நல்ல இனிய மாம்பழம்




கறுத்தக் கொழும்பான் மாம்பழம்
கண்ணைப் பறிக்கும் மாம்பழம்
உரித்துச் சுவைத்து உண்ணுவோம்
உறிஞ்சிச் சாற்றைப் பருகுவோம்




வெள்ளைக் கொழும்பான் மாம்பழம்
வீட்டில் பழுத்த மாம்பழம்
பிள்ளை அணில் பார்த்திருந்த
பெரிய கொழும்பான் மாம்பழம்

அம்பலவி மணம் கமழும்
அருஞ் சுவையும் கொண்டபழம்
நம்பறவைக் கூட்டம் தேடி
நாடும் இனிய மாம்பழமாம்



செம்பாட்டன் என்று சொன்னால்
தித்திக்கத் தேன் கமழும்
நம்வீட்டுத் தோட்ட மெங்கும்
நல்லமாங் .கனி கிடைக்கும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கடற்கரை




கடற் கரைக்குச் செல்லுவோம்
கடல் அலைகள் பார்க்கலாம்
உடலுக்கு இன்பங் கூடிடும்
உள்ளங் கூட மகிழ்ந்திடும்



கப்பல் வள்ளம் பார்க்கலாம்
கட்டு மரங்கள் பார்க்கலாம்
உப்புக் கடல் அலைகிழித்து
ஓடும் பலதைப் பார்க்கலாம்.



கடற் கரையின் மணலிலே
களித்து நண்டு ஓடிடும்
அடர்ந்த புன்னை மரங்களும்
அலர்ந்து பூக்கள் சொரிந்திடும்



வலைகள் போட்டு மீன்களை
வளைத்துப் பிடிக்கும் காட்சிகள்
அலைகள் அடிக்கத் தோணிகள்
ஆடும் அழகும் பார்க்கலாம்.

வெள்ளை மணலில் ஓடியே
விழுந்து புரண்டு எழும்பலாம்
கள்ளம் இன்றி பொழுதெலாம்
கடற் கரையில் கழிக்கலாம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நாடு



இலங்கை எங்கள் நாடதாம்
இனிய எங்கள் வீடதாம்
நிலங்கொள் அழகு மிகுந்தநல்
நெஞ்சை அள்ளும் நாடதாம்.

கங்கை நிறைந்த நாடதாம்
கழனி நிறைந்த நாடதாம்
எங்கும் அழகு மலைகளை
எழிலாய் கொண்ட நாடதாம்.




மாங்காய் வடிவம் போன்றதாம்
மனதை அள்ளும் நாடதாம்.
தேங்காய் றப்பர் தேயிலை
தேடிச் செல்வம் கொடுக்குமாம்.

மதங்கள் பலது இருப்பினும்
மனதால் ஒன்றாய் வாழ்கிறோம்
இதங்கொள் கலைகள் பலதினை
இதமாய் ஆக்கி மகிழ்கிறோம்.




முத்துக் குளிக்கக் கடலுண்டு
முழிக்கும் இரத்தினக் கல்லுண்டு
சித்திர நாட்டியக் கலையுண்டு
சிந்தை மகிழ்வோம் இவைகண்டு.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூனைக்குட்டி

பூனைக் குட்டி பூனைக் குட்டி
பூனைக் குட்டியே
போன இடம் சொல்லிப்போவன்
பூனைக் குட்டியே



வட்ட வட்டக் கண்களுள்ள
பூனைக் குட்டியே
கிட்ட வாவன் அணைத்துக்கொள்ள
பூனைக் குட்டியே




வாலை வாலை ஆட்டிச்செல்லும்
பூனைக் குட்டியே
பாலை இங்கு பருக வாவன்
பூனைக் குட்டியே

துள்ளித் துள்ளிச் செல்லுமெந்தன்
பூனைக் குட்டியே
பிள்ளை நானும் கூப்பிடுறேன்
பூனைக் குட்டியே



சின்னச் சின்னக் கால்களுள்ள
பூனைக் குட்டியே
என்னை நீயும் மறந்திடாதே
பூனைக் குட்டியே










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டுக் குருவி




சிட்டுக் குருவி சிட்டுக் குருவி
சேதி என்னசொல் - உந்தன்
சேதி என்னசொல்
பட்டப் பகலில் பாடியோடி
பறந்து செல்கிறாய் - எங்கே
பறந்து செல்கிறாய்.



இச்சு இச்சு என்று நீயும்
என்ன சொல்கிறாய் - எனக்கு
என்ன சொல்கிறாய்
உச்சிப் பொழுது உனக்கு என்ன
உற்ற நண்பனா - அது
உற்ற நண்பனா?




துள்ளித் துள்ளிக் கொப்பிலங்கு
என்ன பார்க்கிறாய் - அங்கே
என்ன பார்க்கிறாய்?
அள்ளி உன்னைக் கொஞ்ச ஆசை
அருகில் வந்திரு - எந்தன்
அருகில் வந்திடு



மாம் பழங்கள் உண்ணத் தருவேன்
மனது வைத்திடு - என்மேல்
மனது வைத்திடு
ஆம் உனக்கு நண்பனானேன்
நினைவில் கொண்டிடு - என்னை
நினைத்துப் பார்த்திடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா வருவார்



மாமா இன்று வருவாராம்
மாம் பழங்கள் தருவாராம்
மாமா வந்தால் கொண்டாட்டம்
மனமே மகிழும் பூவாட்டம்.

தடைகள் ஏதும் சொல்லாதே
தன்னோ டழைத்துச் செல்வாராம்
கடைகள் வீதி கடற்கரைகள்
காட்டி என்னை மகிழ்விப்பார்




சுற்றிச் சுற்றி அவரோடு
சவாரி செய்வேன் சைக்கிளிலே
வற்றாக் குளங்கள் பூக்களெலாம்
வடிவாய்க் காட்டிச் செல்வாராம்.

புத்தம் புதிய சட்டையும்
பேனா பென்சில் கொப்பியும்
மெத்த எனக்குத் தருவாராம்
மேலும் தந்து மகிழ்வாராம்



கற்க வழிகள் சொல்வாராம்
கதைகள் கூடச் சொல்வாராம்
முற்றம் இருந்து மாமாவின்
மடியில் மகிழ்ந்து துயில்வேனாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழை




வாழ வைக்கும் வாழை - எங்கள்
வாசல் வளரும் வாழை
நாளும் பிள்ளை நாங்கள் - உண்ண
நல்ல கனிகள் தருமாம்.

அப்பா வைத்த வாழை - தண்ணீர்
அம்மா வார்த்த வாழை
கப்பல் வாழை இதுவாம் - இனிய
கதலி வாழை இதுவாம்




குலைகள் போட்டுத் தருமாம் - நல்ல
குட்டி ஈன்று தருமாம்
இலைகள் கூடத் தருமாம் - இது
எங்கள் வீட்டு வாழை

காட்டு மொந்தன் வாழை - இது
கறிக்கு நன்கு உதவும்
தோட்ட மெல்லாம் வைத்தால் - வாழை
தொடர்ந்து வருவாய் தருமாம்.



இதர வாழைப் பழங்கள் - அவை
இனிமை சேர்த்து நிற்கும்
மதுரம் போன்றே இருக்கும் - நல்ல
மருந்தாய் மாறி இனிக்கும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைகள்



நீல வானைத் தொடவென
நிமிர்ந்து நிற்கும் மலையைப் பார்
மேலை மூடும் போர்வையாகி
மேகம் அசைந்து போவதைப் பார்




பச்சைச் சேலை விரித்தாற்போல்
பரந்த தேயிலைத் தோட்டம் பார்
உச்சந் தலையில் பனிதெளித்து
ஊரும் மேகக் கூட்டம் பார்

மலைகள் தழுவும் காற்றைப் பார்
மந்தி மறைந்து கொள்வதைப் பார்
அலையும் பறவைக் கூட்டம் பார்
அவற்றின் அசையும் சிறகைப் பார்




தேயிலைச் செடியின் தளிரைப் பார்
தெரிந்து பறிக்கும் அழகைப் பார்
பாயும் அருவியின் சிலிர்ப்பைப் பார்
பனியில் நனையும் மாந்தரைப் பார்



வண்ண வண்ண மலர்கள் பார்
வளைந்து செல்லும் வீதி பார்
கண்ணைப் பறிக்கும் காட்சியெலாம்
களைத்த மனிதரின் உழைப்பல்லவோ






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காகம்

காகா என்று கரைந்திடும்
காகம் எங்கள் நண்பனாம்
போகா தெங்கள் முன்னின்று
பறந்து செய்திகள் பலசொல்லும்.



வீட்டுப் பறவை போலவே
வீட்டைச் சுற்றி நாளெலாம்
சேட்டை பலவும் செய்திடும்
தெத்தித் தெத்திக் கரைந்திடும்



கன்னங் கரிய காக்கையின்
கண்ணின் அழகே அழகுதான்
அன்னம் போன்று நடந்திடும்
அதற்கு உவமை காட்டிடும்



அழுக்கை நீக்கி வைத்திடும்
அழகாய் நீரில் அலம்பிடும்
கிழக்கு வெளுக்கும் முன்னெழும்
கிளர்ந்து பாடித் திரிந்திடும்.


துன்பம் வந்தால் ஒன்றாகித்
துயரைப் பகிர்ந்து கொண்டிடும்
அன்பில் தோய்ந்து வாழ்ந்திடும்
அதுவே காக்கை உயர்குணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம்




பட்டம் வானில் பறக்குது
பாடி ஆடிப் பறக்குது
எட்டு மூலைப் பட்டத்தின்
எழிலை வந்து பாருங்கள்




சுட்டிப் பயல்கள் நூலினைச்
சுண்டச் சுண்டப் பறக்குது
வட்ட நிலாவைத் தொட்டிட
வானில் உயர்ந்து பறக்குது

வாலோ நீண்ட பட்டமாம்
வண்ண மூலைப் பட்டமாம்
காலை மாலை வேளையில்
காணும் எங்கள் பட்டமாம்



வெளிச்சங் காட்டிப் பறக்குது
விண்ணை முட்டப் பறக்குது
களிப்பு மனதில் பொங்குது
காற்றும் வீசித் தள்ளுது

பட்டம் ஆடும் அழகைப்பார்
பாலா மாலா வந்துபார்
தொட்டுப் பார்த்து ரசிக்கலாம்
சேர்ந்து கூடி ஆடலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மழை வருகிறது

காற்று நன்கு வீசுது
கடலும் பொங்கி வழியுது
ஆற்று மீனும் துள்ளுது
அதனைப் புள்ளும் பார்க்குது



மாரித் தவளை கத்துது
மாவில் குயிலும் கூவுது
சேரிக் குளத்துப் பூக்களில்
சிரிப்பு காதில் கேட்குது



பறவைக் கூட்டம் வானிலே
பாடிப் பறந்து போகுது
கறவைக் கூட்டம் பட்டியைப்
பார்த்து விரைந்து ஓடுது



வானம் கருமை கொள்ளுது
வெட்டி மின்னல் பாய்ச்சுது
மானும் முயலும் துள்ளுது
மயிலும் கூட ஆடுது.

மழையும் பொழியப் போகுது
மனதும் நிறையப் போகுது
விளையும் பயிர்கள் செழித்திடும்
வீட்டில் இன்பம் கூடிடும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தொலைக் காட்சி




தொலைக் காட்சி பார்த்திட
தோழர் ஓடி வாருங்கள்
மலைக் காட்சி பாரக்கலாம்
மனதில் இன்பங் கொள்ளலாம்.




நாட கங்கள் பார்க்கலாம்
நாட்டுக் கூத்தும் பார்க்கலாம்
ஆடல் பாடல் கலைகளை
அதிலே பார்த்து மகிழலாம்




செய்தி பலவும் கேட்கலாம்
சேர்ந்து மகிழ்ந்து பார்க்கலாம்
உய்யும் வழிகள் கேட்கலாம்
ஓடி விரைந்து வாருங்கள்



குட்டிக் கதைகள் கேட்கலாம்
குரங்குக் கூட்டம் பார்க்கலாம்
எட்டித் தாவும் விலங்குகள்
எல்லாம் திரையில் பார்க்கலாம்




நாடு நகர்கள் பார்க்கலாம்
நதிகள் மலைகள் பார்க்கலாம்
சாடும் சுனாமி அவலங்கள்
சனங்கள் வாழ்வைப் பார்க்கலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோசாப் பூ



சின்னச் சின்ன ரோசாப் பூ
சிவந்த நல்ல ரோசாப்பூ
என்னைப் பார்த்து சிரிக்கும்பூ
எங்கள் வீட்டு ரோசாப்பூ



கண்ணைப் பறிக்கும் ரோசாப்பூ
களங்கம் இல்லா ரோசாப்பூ
அண்ணா விரும்பும் ரோசாப்பூ
அக்கா சூடும் ரோசாப்பூ



அடுக்கி வைத்த இதழ்களால்
ஆன நல்ல ரோசாப்பூ
எடுப்பாய் ஆடும் ரோசாப்பூ
எங்கள் தோட்ட ரோசாப்பூ



சுற்றி உள்ள முட்களால்
சுகமாய் இருக்கும் ரோசாப்பூ
பற்றிப் பிடுங்க முடியாமல்
பார்த்துச் சிரிக்கும் ரோசாப்பூ




சுகந்தமான மணம் வீசும்
சொர்க்கம் எங்கள் ரோசாப்பூ
அகம் குளிர வைத்தெம்மை
அணைத்துக் கொள்ளும் ரோசாப்பூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் வீட்டுச் சேவல்




காலை எம்மை எழுப்புமாம்
கவலை யற்றுத் திரியுமாம்
காலால் கிளறிக் கொள்ளுமாம்
கண்ட உணவை உண்ணுமாம்



கூவிச் சிறகை அடிக்குமாம்
கொக்க ரித்துக் கொள்ளுமாம்
தாவிச் சண்டை செய்யுமாம்
தாவித் தாவி நடக்குமாம்.



தலையில் நல்ல பூவுண்டு
தக்க இரண்டு காலுண்டு
குலையா இரண்டு சிறகுண்டு
கூராய் நல்ல வாயுண்டு



வட்டமான இரண்டு கண்
வளைந்து பார்க்க உதவுமாம்
கிட்ட வந்து கூவுமாம்
தொட்டால் துள்ளி ஓடுமாம்.

வீட்டுக் கூரை மீதேறி
வெட்டித் தலையை அசைக்குமாம்
கூட்டத் தோடு திரியுமாம்
கொண்டை யுள்ள சேவலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் ஆடும் பந்து



பாலர் ஆடும் பந்திது
பந்து சின்னப் பந்திது
சாலை ஓரம் ஆடுவோம்
சண்டை யின்றி ஓடுவோம்



வட்ட மான பந்திது
வரிகள் உள்ள பந்திது
பட்டுத் தெறிக்கும் பந்திது
பள்ளம் பாயும் பந்திது



நாலா திசையும் பாயுது
நம்மை முந்தி ஓடுது
பாலா ஓடிப் பிடியடா
பாய்ந்து அள்ளிக் கொள்ளடா


துள்ளித் பாய்ந்து உருளுது
துரத்திப் பிடிக்கப் புரளுது
பள்ளிப் பாலர் எங்களின்
பாசம் உள்ள பந்திது



காலால் அடித்துக் கொள்ளலாம்
கையால் பிடித்துக் கொள்ளலாம்
கோல்கள் கொண்டு தட்டலாம்
கொட்டிச் சிரித்துக் கொள்ளலாம்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்பல்



நீலக் கடல் மீது
நீந்தும் கப்பல் பாருங்கள்
ஆழம் அறியாக் கடலில்
அழகாய்ப் பயணம் போகுது




மக்கள் பயணம் செய்யுவார்
மனதை பதித்துக் கொள்ளுவார்
அக்கம் பக்கம் பின்னாலும்
அலைகள் கொஞ்சும் அழகைப்பார்


இயந்தி ரத்தால் இயங்குது
இனிய பயணம் தருகுது
பயமே இன்றி செல்லலாம்
படுத்தி ருந்தும் செல்லலாம்



சின்னப் பிள்ளை சிரிப்பதாய்
சிறிய அலைகள் ஒலித்திடும்
உண்ண உணவும் கிடைக்குமாம்
உள்ளம் மகிழச் செய்திடும்



காற்று வந்து உடலையும்
கட்டி அணைத்துச் சென்றிடும்
ஆற்றும். சேவை அற்புதம்
அழகுக் கப்பல் பாருங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்புறா



செட்டை தட்டிப் பறக்குதாம்
சிந்தை அள்ளும் வெண்புறா
பட்ட ணங்கள் ஊரெல்லாம்
பாடிப் பாடிப் பறக்குதாம்




சண்டை விட்டுத் தள்ளுங்கள்
சமா தானம் கொள்ளுங்கள்
அண்டை அயல் நாட்டுடன்
அன்பைப் பேணிக் கொள்ளுங்கள்.

ஒற்று மையாய் வாழுங்கள்
ஒன்று பட்டு உழையுங்கள்
முற்ற உள்ள ரோசாபோல்
முகம் மலர்ந்து கொள்ளுங்கள்.



யுத்தம் அழிவு செய்திடும்
யுகமும் கூட எரிந்திடும்
கத்திக் கத்தி வெண்புறா
கவிதை பாடிச் சொல்லுதாம்.

அன்பு கொண்ட வெண்புறா
அறிவுரைகள் கேட்டு நாம்
சின்னஞ் சிறிய பிள்ளைகள்
சாந்தி பெற்றுப் பாடுவோம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ட்டெறும்பு

கட்டெறும்பே கட்டெறும்பே
கடித்து விடாதே - நீயும்
கடித்து விடாதே
கிட்ட வாவன் உன்னோடுநான்
கதைக்கப் போகிறேன் - அன்பாய்க்
கதைக்கப் போகிறேன்.




காடுமேடு பள்ள மெல்லாம்
காண்கிறேன் உன்னை - நிதம்
காண்கிறேன் உன்னை
ஓடியோடி உழைக்கு முந்தன்
உழைப்பைப் போற்றுறேன் - உனது
உழைப்பைப் போற்றுறேன்



கூட்டத்தோடு உழைக்கும் உங்கள்
கொள்கை நன்றுதான் - உங்கள்
கொள்கை நன்றுதான்
ஓட்ட மோடி வந்திடுவாய்
ஒன்றாய் ஆடலாம் - சேர்ந்து
ஒன்றாய் ஆடலாம்



கன்னங் கரிய நிறமுனக்கு
கண்ணைப் பறிக்குது - எந்தன்
கண்ணைப் பறிக்குது
தின்ன உனக்குத் தீனிதாறன்
தாவி வந்திடு - பக்கம்
தாவி வந்திடு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகான குளம்


அங்கே குளத்தைப் பாருங்கள்
அலைகள் நெளிந்து சிரிக்குது
எங்கும் மீனின் துள்ளலாம்
இனிய இன்பக் காட்சியாம்



பூக்கள் பூத்துக் குலுங்குது
புதிய தேறல் சுரக்குது
தூக்கம் இன்றி வண்டினம்
தேடித் தேனைச் சுற்றுது




கொக்கு நிரை வட்டமாய்
குளத்தின் கரையில் பதுங்குது
கொக்கின் நிழல் நீரினுள்
கண்ட மீன்கள் மறையுது




பறவைக் கூட்டம் சேர்ந்தொன்றாய்
பாடிப் பறந்து மகிழுது
சிறகு விரித்துக் கோதுது
சிந்தை அள்ளிக் கொள்ளுது

புல்லும் பூவும் கொடியுடன்
படர்ந்து ஆடும் குளத்தினில்
அல்லும் பகலும் குளித்திட்டால்
அலுப்பு நீங்கிச் சுகம்வரும்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு கட்டுவோம்



சின்னச் சின்ன தடிகளால்
சிறிய வீடு கட்டுவோம்
அண்ணன் தங்கை சேர்ந்துநாம்
அன்பைப் பேணிக் கொள்ளுவோம்



ஓலை கொண்டு கண்ணனும்
ஓடி அங்கு வருகிறான்
நாலு எண்ணும் முன்னரே
நம்மை வந்து சேருவான்




கல்லும் களியும் எடுத்துமே
காந்தன் ஓடி வருகிறான்
அள்ளி நீரை ஊற்றியே
அங்கு மீனா குழைக்கிறாள்



கப்பும் வளையும் கொண்டுநாம்
கட்டி வீட்டை ஓலையால்
செப்பமாக வேய்ந் திட்டோம்
சுவர்கள் கூட வைத்திட்டோம்



சின்ன எங்கள் வீட்டினைச்
சுற்றிப் பூங்கா வைத்துளோம்
முன்னால் வழை நாட்டினோம்
முழுதும் காண வாருங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்க்குட்டி



எங்கள் வீட்டில் வளர்கின்ற
இனிய எங்கள் நாய்க்குட்டி
அங்கும் இங்கும் ஓடியோடி
அன்பு காட்டும் நாய்க்குட்டி.

பப்பி என்ற பெயருடன்
பாசம் பொங்க வளர்க்கிறோம்
தப்புத் தவறு செய்தாலும்
தானாய் வந்து வாலாட்டும்



துள்ளி எங்கும் குதித்திடும்
தோளில் காலை வைத்திடும்
அள்ளிக் கொள்ள ஓடிடும்
அருகில் நின்று குரைத்திடும்

வாலை நன்றாய் ஆட்டிடும்
வாஞ்சை கொண்டு பழகிடும்
காலை மாலைப் பொழுதெலாம்
கூட இருந்து களித்திடும்



வட்ட வட்டக் கண்களும்
வடிவாய் ஆன செவிகளும்
பட்டுப் போன்ற மேனியும்
பார்க்க ஆசை பொங்கிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பாளர் உரை

'அன்புள்ள வாசகர்களே
இந்த நூலை எழுதியவர் ஆசிரியராக அதிபராக, கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய எழுத்தாளர் அமரர் திரு.க.தங்கராசா அவர்கள். 'சங்கீதன்' என்ற சிறுவர் நாவலை உங்களுக்கு எழுதி வெளியிட்டவர். அவர் எழுதிய 'குழந்தை உலகம்' என்ற இந்நூலை உங்களுக்காகத் தருகிறோம். திரு.க.தங்கராசா அவர்களது பாடல்கள் மிகவும் இனிமையானவை. இலகு நடையில் எழுதியுள்ளார். உணர்ச்சிகள் நிரம்பிய அவரது பாடல்களை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். நமது பிள்ளைகள் இவ்வகைப் பாடல்களை வாய்விட்டுப் படிக்க வேண்டும். இந்த நூல் பிள்ளைகளைச் சிந்திக்க வைக்கிறது.

எவ்வளவுக் கெவ்வளவு நமது பிள்ளைகள் வாசிக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சிந்திக்கிறார்கள். அதேபோல் நமது பிள்ளைகள் எவ்வளவுக் கெவ்வளவு எழுத முனைகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சிந்திக்கிறார்கள். இதுதான் உண்மை. நமது பிள்ளைகளை நன்றாக வாசிக்கப் பழக்க வேண்டும். அந்தப் பழக்கத்தைப் பெற்றோர்கள்தான் வீட்டில் தொடக்கி வைக்க வேண்டும். பிள்ளைகள் படிக்கும் நேரத்தை நீங்கள் ஒதுக்க வேண்டும். அவர்கள் படிக்கும் நேரத்தில் தொலைக்காட்சியைப் பார்ப்பதைத் தவிர்த்து விடுங்கள்.

பெற்றோருக்கு அடுத்து நிற்பவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்கள் பிள்ளைகளை வாசிக்கவும், எழுதவும் தூண்டவேண்டும். பெற்றோரினது சொற்களைவிடவும் பிள்ளைகளது மனங்களிலே ஆசிரியர்களது சொற்கள் எடுபடும். ஆதலால் அவர்களை வாசிப்பில் ஈடுபடுத்த வைக்க வேண்டியது ஆசிரியர்களது கடமையாகும். நல்ல நல்ல நூல்களை வாசிக்கும்படி அறிவுறுத்துங்கள். அதேபோல் நல்ல நல்ல நூல்களை அவர்களுக்கு அறிமுகம் செய்யவும் வேண்டும்.

பலபெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் தமது செல்வங்கள் என்பதை மறந்து விடுகிறார்கள். தங்களையிட்டுக் கவலையில்லாது வாழ்பவர்கள்தான் நமது பிள்ளைகள். அவர்களை நல்லவர்களாக்க வேண்டிய பாரிய பொறுப்புப் பெற்றாரிடம் உள்ளது. நாங்கள் பல அறிஞர் பெருமக்களிடம் நல்ல நூல்களை எழுதும்படி கேட்டு அவ்றறைப் பிரசுரம் செய்து தருகிறோம். இதனை வாங்கி உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்துப் படிக்கத் தூண்டுங்கள். உங்களது பிள்ளைகளின் நல்வாழ்வு உங்கள் கைகளில்தான் உண்டு.

நன்றி
க.சதீஸ்
முகாமையாளர்.
லங்கா புத்தகசாலை
கொழும்பு -12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியர்.....



திரு.க.தங்கராசா அவர்கள் ஆலங்கேணிக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக்கல்வியை ஆலங்கேணியிலும், பின்னர் மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலும் கற்றவர். நல்ல ஆசிரியராக, அதிபராக, இலங்கை கல்வி நிர்வாக சேவையின் மூதூர், திருகோணமலை, வவுனியா வடக்கு ஆகிய கல்வி வலயங்களில் கல்விப் பணிப்பாளராகச் சேவை செய்து ஓய்வு பெற்றவர். தரமான கவிஞர். சிறந்த சிறுகதை எழுத்தாளர். ஆலங்கேணிக் கிராமத்தில் பிறந்து படிப்படியாய் சுயமுயற்சியினால் முன்னேறியவர். மிகச் சிறந்த கல்விமான். அருமையான பேச்சாளர். தமிழ்ப்பற்றாளர்.



அவர் இன்று நம்மிடையே இல்லை. அவரது இழப்பு நம்மவர்களுக்குப் பேரிழப்பாகும். சங்கீதன் என்ற சிறுவர் நாவலையும், பொங்கினாள் மீனாச்சி என்ற கவிதைத் தொகுப்பினையும் எழுதியவர். அவரது ஆக்கங்களை வெளிக் கொண்டு வருவது நமது கடமையாகும். அவருக்கு நாம் செய்யும் கைமாறு அவரது ஆக்கங்களை வாங்கிப் படிப்பதாகும். உங்கள் ஒத்தாசைகளைத் தரும்படி கேட்டு நிற்கிறோம். அமரர் தங்கராசா அவர்களது நூல்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்று ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வலயக்கல்விப் பணிமனை
திருகோணமலை

ஒ.குலேந்திரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

Printed by :
NISAAN PRINTERS (PVT) LTD. No. 64N, Peer Saibo Street, Colombo-12. TEL : 2439401, 4997221

noolaham.org | aavanaham.org